# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, வைகாசி 7உ (20—5—73) ஞாயிறு ரபி; ஆகி 16—புத்தகம் 26 இதழ் 23


## ஆசிரியர்கள்மீது நிர்ப்பந்தம்

மே 22-ம் திகதி ஓர் சட்டரீதியாலவிடுமுறை நாளென அரசாங்கத்தினுல் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. ஆனுல், அன்றைய தினம் தமிழ்ப் பகுதியில் உள்ள ஆசிரியர்கள் பாடசாலைக்குச் சென்று கையொப்பமிட வேண்டுமெனப் பணிக்கப் பட்டுள்ளார்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

# மே 22ம் நாளன்று

# உதயசூரியன் கொடி

# ஊரெங்கும் பறக்கும்

## உரிமைக்குப் போராடத் தமிழினம் அன்று உறுதியெடுத்துக் கொள்ளும்

## தேசிய கீதம்

[சிங்களக் குடியரசு எதிர்ப்பு நாளான மே 22ம் திகதியன்று தமிழீழமெங்கும் ஒவ்வொரு தொகுதியிலும் தமிழர் விடுதலைக்கொடியான உதயசூரியன் கொடி ஏற்றி வைக்கப்படவிருக்கிறது. அப்போது பாடுவதற்கு வசதியாக கூட்டணியின் தமிழ்த் தேசிய கீதத்தை இங்கு வெளியிடுகிறேம்.]

எடுப்பு

வாழ்க ஈழத் தமிழகம் வாழ்க இனிது வாழ்கவே
மலைநிகர்த்திவ் வுலகில் என்றும் தலைநிமிர்ந்து வாழ்கவே

முடிப்புக்கள்

அமிழ்தை வென்ற மொழியினள்
அருள் கனிந்த விழியினள்
அரிய பண்பு நிதியினள்
அவனிமெச்சும் மதியினள்
மமதை கொண்ட பகைவரும்
வணங்கும் அன்பு விதியினள்
வளரும் முப்பத்தைந்து லட்சம்
மக்கள் கொண்ட பதியினள்

வானம்பாடி போல மீன்
கானம் பாடும் வாவிகள்
மலர் கனி குலுங்கிடும்
எழில் மிகுந்த சோலைகள்
தேனும்பாலும் பாய்ந்திடச்
செந்நெல் வளரும் கழனிகள்
தெய்வ கற்பகத் தருக்கள்
உவ்வனிக்கும் மாநிலம்!
—வாழ்க

பட்டிப்பளை மாவலி
பயில் அருவி முத்தாறுகள்
பல வளங்கள் பொலியவே
எழில் நடஞ்செய்துலவிடும்
மட்டக்களப்பு, யாழ்நகர்
மாந்தை, வன்னி, திருமலை
மகிழ்வொடு மலைத்தமிழர்கள்
மலரடிதொழும் இனியவள்
—வாழ்க.

## குடியரசு விழாக்கள் பகிஷ்கரிக்கப்படும் தனியரசு காணத் திட்டங்கள் தயாராகும்!

'ஶ்ரீலங்கா' குடியரசு நாடாகிய முதலாவது ஆண்டு நிறைவையொட்டி இத்திங்கள் 22ம் நாள் சிங்கள மக்களும், சிங்கள அரசும் குதூகலத்துடன் விழா வெடுக்கும் அதே வேளையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழீழ மக்கள், தங்கள் சுதந்திரத்தையும் சுயாட்சியையும் நிறுவிக் கொள்ளவும், புதிய அரசியல் சட்டத்தை ஒருபோதும் ஏற்பதில்லையென்றும் உறுதி யெடுக்கவுள்ளனர்.

தமிழ் ஈழத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் தமிழினத்தின் இந்த உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழர் கூட்டணியின் 'உதயசூரியன்' கொடி ஏற்றி வைக்கப்படவிருக்கிறது.''

தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத புதிய அரசியல் சட்டம்-தமிழ் மக்களை நித்திய அடிமைகளாக்கி, அழித்தொழிக்க வகை செய்வதாக கருதப்படும் அரசியல் சட்டம்-முதன்முதலாக இந்நாட்டில் திணிக்கப்பட்டது கடந்த ஆண்டு மே 22ந் திகதியென்பது தெரிந்ததே.

(7-ம் பக்கம் பார்க்க)

## 20—5—73ல் ஊர்வலம் கூட்டம்!

சிறைச்சாலைகளில் அவசரகாலச்சட்டவிதிகளின் எவ்வித விசாரணையுமின்றி அடைத்துவைக்கப் பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய வேண்டும்; அல்லது அவர்களை நீதிவிசாரணைக்காக தாமதமின்றி ஆஜர் செய்ய வேண்டும் என்கின்ற கோரிக்கையை வலியுறுத்தி தமிழர் கூட்டணியின் ஆதரவுடன் தமிழ் இளைஞர் பேரவை 20—5—73ல் யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமான மௌன ஊர்வலமொன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை, தனிச் சிங்கள பௌத்த நாடாக்கப்பட்டு வருவதையும், அரசியல் திட்டத்தில் தமிழுரிமைகள் புறக்கணிக்கப்பட்டதையும் தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் கல்விக்கு ஊறு தேடப்படுவதையும், தமிழர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் மறுக்கப்படுவதையும் அவசரகாலச்சட்டத்தின் கீழ் ஜனநாயகம் படுகொலை செய்யப்படுவதையும் கண்டித்தும் தமிழ் இளைஞர் பேரவை இந்த ஊர்வலத்தை நடத்துகிறது.

மருதனமடம் சந்தியிலிருந்து அன்று பிற்பகல் ஆரம்பமாக விருக்கும் இந்த பிரமாண்டமான ஊர்வலம் யாழ்ப்பாணம் கோட்

(7-ம் பக்கம் பார்க்க)

**இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கோடி ரூபா செலவில் மயிலையில் திருவள்ளுவருக்கு நினைவாலயம்

## வள்ளுவன் புகழை வான்முட்டப் பரப்ப தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கை!

### அடிக்கல் நாட்டு விழாவில் கலைஞர் மு. க. விளக்கம்!

'திருவள்ளுவரின் புகழை —பெருமையை —அவர் உலகத்திற்குத் தந்த பொதுமறையை அதன் சிறப்பை இந்தியத்துணைக் கண்டத்திலும் — அனைத்துலகத்திலும் பரப்பும் முயற்சியை நெடுங்காலமாக எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த அரசைப் பொறுத்து 1967-ல் அண்ணா அவர்கள் ஆட்சியை உருவாக்கியபோது என்னை பொதுப்பணி அமைச்சராக அண்ணா பணித்தார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள அரசாங்கப் பேருந்துகளிலெல்லாம் திருவள்ளுவரின் படத்தையும் போட்டு — திருக்குறளையும் பொறிக்கவேண்டும் என்று அதனைச்செய்தோம்.

அப்போது சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையிலிருந்து விநாயகம் அவர்கள் அண்ணாவைப் பார்த்து ''யாகாவாராயினும் நாகாக்க'' என்று பேருந்துகளில் திருக்குறள் எதியிருக்கிறீர்களே—யாருக்காக அந்தக்குறள் எழுதப்பட்டது-டிரைவருக்காகவா — கண்டக்டருக்கா? என்று கேட்டார்.

உடனே அண்ணா அவர்கள் யார் யாருக்கு நாக்கு இருக்கிறதோ அவர்களுக்கெல்லாம்'' என்று நல்கினார்.

அப்படிப்பட்ட அருமையான குறட்பாக்கள் திருக்குறளில் இருக்கின்றன.

அதுமட்டுமல்ல; தமிழ்நாட்டில் பொதுப்பணித்துறையைச் சேர்ந்த சுற்றுலா மாளிகைகளிலும் —அரசாங்க சுற்றுலா மாளிகை — நகராட்சி பயணிகள் விடுதி போன்றவைகளிலெல்லாம் திருவள்ளுவரின் திருவுருவப் படத்தை வைக்க வேண்டும் என்று முடிவெடுத்து சொல்லப்பட்டது.

#### காவல்துறை பதக்கத்தில் வள்ளுவர்

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு, அவரது பிறந்த நாளில் காவல் துறையைச் சேர்ந்த திறமையானவர்களுக்கு முதல்வர் பதக்கம் வழங்கவேண்டும். சிறந்த சேவைக்காக பொற்கிழியும்—நற்சான்றிதழும் தரவேண்டும் என்று முடிவெடுத்து—அப்படிப்பட்ட பதக்கத்தில் யாருடைய திருவுருவம் பொறிக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டபோது திருவள்ளுவரின் திருவுருவத்தைத்தான் பொறித்திருக்கிறோம்.

ஏனென்றால் ''கடிதோச்சி மெல்ல எறிக!'' என்பதற்காகத்தான்!

இந்த அளவுக்கு திருவள்ளுவரையும்-திருக்குறளையும் மக்கள் மனதில் பதியவைக்க வேண்டும் என்ற முறையில் அரசும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

சென்னையில் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றபோது 9 லட்சம் ரூபாவில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு 3 லட்சம்-சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 3 லட்சமும் மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு 3 லட்சமுமாக ஆக 9 லட்ச ரூபாய் திருக்குறள் ஆராய்ச்சிக்காக



அளிக்க முடிவு செய்து—அவற்றை துணைவேந்தர்களிடம் ஒப்படைக்கும் விழா கடற்கரையில் நடைபெற்று முன்னாள் குடியரசுத் தலைவரும் அந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிறார்.

கல்வியமைச்சர் நாவலர் அவர்களின் அக்கறையோடும்—ஆர்வத்தோடும் துணைவேந்தர்கள், தமிழ்ப்புலவர்கள் ஆகியோரின் உறுதுணையோடும் ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

திருக்குறளையும்— திருவள்ளுவரையும் மக்கள் உள்ளத்தில் பதிய வைக்கவும் குறளின் பெருமையை உலகமெங்கும் பரப்பவும் அரசு பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கிறது.

அந்த வகையில் இந்தத் திருவள்ளுவரின் ஆலயத்தையும்வரலாற்றுச்சிறப்புடையதாக ஆக்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இருந்தது.

சிலப்பதிகாரக் கலைக்கூடம் அமைக்க வேண்டும் என்று விரும்பி — அதற்கான சிற்ப வேலைகள் மாமல்லபுரத்தில் நடந்து கொண்டிருந்தபோது திங்களுக்கு இருமுறையாவது நான் செல்வேன்.

அங்கே வேலை செய்து கொண்டிருந்த சிற்பக்கல்லூரி மாணவர்கள்—''இந்த வேலை முடிந்த பிறகு எங்களுக்கு [illegible] வேண்டும்'' என்று சொன்னார்கள்.

'என்ன வேலை தருவது'? என்ற ஏக்கத்தோடுதான் நான் திரும்பினேன்.

''பழுதுபட்டிருக்கின்ற ஆலயங்களை எல்லாம் புதுப்பிக்க எங்களை அனுப்புங்கள் என்றார்கள்.

பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடம் மட்டுமல்ல; மேலும் எட்டு கட்டிடங்களுக்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டிருக்கிறது. அரசு எட்டு கட்டிடங்களும், கலைமணம் கமழத் தக்கதாகத் திகழும்.

அந்த சிலப்பதிகாரக் கலைக்கூடத்தை மக்கள் எவ்வளவு ஆர்வத்தோடு சென்று கண்டு களிக்கிறார்கள் என்பதைக் பற்றி தஞ்சைக்கு சென்று வந்த நாவலர் அவர்கள் என்னிடம் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்கள்.

'அப்படிப்பட்ட தமிழார்வம் — மீண்டும் வந்திருக்கிறது.

வரலாறு திரும்பி வருவதை—சரித்திரம் புதுப்பிக்கப்படுவதைக் காணவேண்டும் என்ற துடிப்பும்—ஆர்வமும் எழுந்திருக்கிறது என்பதற்கு இவையெல்லாம் அடையாளமாகும்!

மாமல்லபுரத்திலிருக்கின்ற மாணவர்களுக்கு அளித்தவாக்குறுதியை நிறைவேற்றவும் — திருவள்ளுவருக்கு அழியாத நினைவுச் சின்னம் அமைத்திடவும்—தமிழகத்தின் கலைவளம் கண்டு உலகத்தார் மகிழ்ந்திடவும் — சுற்றுலாத்துறை வளரவும் அதே நேரத்தில் பொருளாதாரமும் வளர வேண்டும் என்ற இவ்வளவு கண்ணோட்டத்தோடும் இந்த திருவள்ளுவர் நினைவாலயம் அமைகிறது!

இந்த நினைவாலயத்தை திருவாரூர் தேர் போல அமைக்க இருக்கிறோம். இரண்டு முறை குழுக் கூட்டி இந்த முடிவை எடுத்தோம் —ஏனென்றால் இது திருவள்ளுவர் விவகாரம்! யாரும் குறை காணக் கூடாது என்பதற்காகத்தான்!

தேர்போல் அமையும் இந்த நினைவாலயம் கருங்கற்களினாலேயே அமைக்கப்பட இருக்கிறது.

1333 குறட்பாக்களும்—ஒவ்வொரு குறளையும் விளக்கும் சிற்பங்களும் வைக்க வேண்டும் என்று ஆசை! இதற்கெல்லாம் பல லட்சம் செலவாகும்!

அரசு சார்பில் இதற்கு உதவி செய்ய வேண்டும் என்கிறார்கள்; இப்படிப்பட்ட காரியங்கள் யாரும் சொல்லி செய்வதல்ல; இந்தக் காரியத்திற்கே அரசுதான் முயற்சி எடுத்திருக்கிறது.

நிச்சயம் வெகு விரைவில் இந்த நினைவாலயம் அமையும்!

## தமிழனுக்குப் பெருமை தருவது திருக்குறள்!

உலக மகா கவிஞர்களெல்லாம் ஒன்று கூடி மாநாடு கூட்டினாலும் — அவர்களெல்லாம் ஒருமித்த கருத்தோடு ஒத்த கருத்துடைய தலைவர் ஒருவரை தேர்ந்தெடுக்க நினைத்தால்; தகராறுக்கு இடமில்லாத; வழக்குக்கு இடமில்லாத தலைவராக இருக்கத் தகுதி படைத்தவர், திருவள்ளுவர்தான்!

பல கவிஞர்கள் நாட்டையும்—அரசனையும்—பாடியிருக்கிறார்கள். ஆனால் உலக சமுதாயத்திற்கே பாடியவர் திருவள்ளுவர்தான். அதனால்தான் பாரதியார் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்த வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாராட்டினார்.

உலக நாடுகளோடு நாம் அறிவியல் துறையிலோ —பொறியியல் துறையிலோ வேறு துறைகளிலோ போட்டி போட முடியாதென்றாலும் —திருக்குறளுக்கு ஈடான பொதுவான நீதிநூல் உண்டா என்று கேட்கத்தக்க விதத்தில் இலக்கியத்தில் நமக்குப் பெருமையுண்டு!

'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியமில்லை உயிர்க்கு' என்று வள்ளுவர் சொன்னார்.

அந்தக் குறளின் அடிப்படையில்—இங்கே அமைய இருக்கின்ற நினைவாலயத்திற்கு எல்லோரும் உதவி செய்து மகிழ்ந்து வாழவேண்டும்.

— கல்வியமைச்சர் நாவலர்
(திருவள்ளுவர் நினைவாலய அடிக்கல் நாட்டு விழாவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியரசு நாளா? குடிகெடுத்த நாளா?

அன்பு நண்பா,

இராவணன் காலத்துக்கு முன்பிருந்தே ஈழத்து மண்ணின் தனிப்பெரும் சொந்தக்காரர்களாக இந்நாட்டில் வாழ்ந்துவரும் மானத் தமிழினத்தின் அடிப்படை அரசியலுரிமைகளைப் பறித்து —அவர்களை அடிமைகளாக்கி அழித்தொழித்திட வழிவகுப்பதாக அரசியல் அறிஞர்கள் கருதுகின்ற புதிய அரசியல் திட்டம் — தமிழர்களின் சம்மதமின்றி தமிழர்கள்மீது சிங்கள இனம் ஆட்சி புரிந்திட வழிவகுத்திடும் புதிய அரசியலமைப்பு — இந்நாட்டில் புகுத்தப்பட்டு, இந்த ஆண்டு மே இருபத்திரண்டுடன் ஓராண்டாகி விட்டது! அதாவது கோலத் தமிழினத்தின் வாழ்வு குலைக்கப்பட்டு— ஈழத்து மண்ணில் அவர்களை என்றென்றும் அடிமையாக்கிடும் அரசியல் மரணவோலை தீட்டப்பட்டு ஓராண்டு ஓடி மறைந்து விட்டது!

இந்த மே 22ல் — வந்துசேர்ந்த இனம், வாழ்ந்துகொண்டிருந்த தமிழ் இனத்தின் உரிமைகளையெல்லாம் விழுங்கி ஏப்பமிட்டுவிட்ட நாளில் — விழா எடுக்கிறார்களாம் சிங்கள ஆட்சியாளர்கள் -'குடியரசு தினவிழா! குடியரசு அவர்களுக்கு —கொடியரசு தமிழ்க் குலத்துக்கு!

கொடியும் கொற்றமும் முடியும் வைத்து ஒருகாலத்தில் குடியாட்சி நடத்தியவர்கள் ஈழத்தமிழ்க் குடிகள்! உண்மையான குடியரசாக — தமிழினத்தின் உரிமைகளுக்கு சமத்துவம் அளிக்கின்ற குடியரசாக குடியரசு அரசியலமைப்பு இருந்திடுமானால் குதூகலம் பொங்கிட— குவலயம் மகிழ்ந்திட ஈழத் தமிழினத்தார் குடியரசு நாளை கொண்டாடத் தவறமாட்டார்கள்.

ஆனால் தனக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நாளை தமிழினம் எப்படிக் கொண்டாடிட முடியும்? தனக்கு மரணவோலை தீட்டப்பட்ட நாளில் எப்படிக் களிப்புடன் விழா எடுத்திட முடியும்?

ஆம் மே — 22, ஈழத்தமிழர்களின் உரிமைகளை சிங்களப் பெரும்பான்மை இனம் சம்பூரணமாக விழுங்கி ஏப்பமிட்ட நாள்! மொழியுரிமை, மதவுரிமை, அடிப்படை உரிமை, ஆட்சியுரிமை, அத்தனை உரிமைகளும், அரசியல் சட்ட ரீதியாக தமிழர்களுக்கு மறுக்கப்பட்ட நாள்! தன்மானத்துடன் வாழ்ந்துவந்த தங்கத் தமிழினம் தலைகுனிய வைக்கப்பட்ட நாள்! ஓர் இனத்தின் சம்மதமின்றி அந்த இனத்தை ஆளமுடியாது என்ற அரசியல் அரிச்சுவடியை தூக்கியெறிந்துவிட்டு — தமிழினம் எப்படி வாழ (மாள) வேண்டும் என்பதை சிங்கள இனமே தமிழர் பிரதிநிதிகளின் சம்மதமின்றி தன்னிச்சைப்படி முடிவெடுத்துக்கொண்ட நாள்! ஆம் குடியரசு நாளல்ல அது தமிழினத்துக்கு — குடி கெடுத்த நாள்!

புதிய அரசியல் சட்டத்தில் தமிழினத்தின் உரிமைகள் அங்கீகரிக்கப்படவில்லை; —புதிய அரசியல் சட்டத்தால் தமிழினத்தின் சுயமரியாதையும் தமிழுரிமைகளும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டன; புதிய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் உடனடியாக—என்கின்ற கருத்தை ஈழத்தமிழினம் ஏகோபித்த குரலில் வெளியிட்டு வந்தும் கடந்த ஓராண்டாக தமிழினத்தின் குரலுக்கு ஒரு துளியாவது மதிப்புக்கொடுத்து ஆட்சியாளர்கள் அரசியல் சட்டத்தில் ஓர் எழுத்தைக்கூட திருத்த முன்வராதது மட்டுமல்ல—திருத்துவோம் என்று கூட அறிவிக்க மனமில்லாமல் திமிர்பிடித்தவர்களாக—மதோன்மத்தர்களாக இருந்துவருகிறார்கள்! அரசியல் சட்டத்தைத்திருத்தி தமிழினத்தின் உரிமைகளுக்கு அரசியல் சட்டரீதியான பாதுகாப்பு கொடுங்கள் என்ற கோரிக்கையை திசை திருப்புவதற்கும் மூடி மறைப்பதற்குமாகவே அற்ப சலுகைகளை பிச்சைபோல போட முனைகிறது சிங்கள அரசு அதில் ஒன்றுதான் நீதிமன்ற மொழி விசேட சட்டம்!

சிங்களத்துக்கு அரசியல் சட்டரீதியாக ஆட்சி மொழி, நிர்வாக மொழி, நீதிமன்ற மொழி அந்தஸ்து! அதே வேளையில் தமிழ்மொழி பற்றி முடிவுசெய்யும் பொறுப்பு சிங்கள அமைச்சரின் கையில்! இதுதான் இன்றைய அரசின் மொழிக் கொள்கை! அமைச்சர்களின் விருப்பு வெறுப்புக்கமைய தமிழன்னை தாளம்போட வேண்டுமாம்—இதை தன்மானமுள்ள சுயமரியாதையுள்ள எவனாவது ஏற்றிட முடியுமா?

புதிய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்—அப்போது தான் தமிழினம் சுயமரியாதையுள்ள இனமாக இந்நாட்டில் வாழ முடியும் என்கின்ற கருத்தை

## அரசியல் மேடை

தமிழர் கூட்டணி மட்டுமல்ல—கட்சிசார் பற்ற அறிஞர்கள் மட்டுமல்ல—ஆளுங்கட்சியின் அடி நக்கித் தமிழர்களும் கூட தங்கள் எசமானர்கள் இல்லாத நேரத்தில் அங்கும் இங்கும் திரும்பிப்பார்த்துவிட்டு ஆங்காங்கே வெளியிட்டு வந்திருக்கிறார்கள்! தமிழினத்தின் ஒன்றுபட்ட குரல் அவர்களுக்கும் உள்ளூர அச்சத்தைக் கொடுத்திருக்கிறது போலும்!

ஐ. நா. உரிமை சாசனப்படி, தமிழினத்தின் அரசியல் உரிமைகளை வழங்கும் முறையில் புதிய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று தீர்மானம் போட்டது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் அல்பிறட் துரையப்பாவைத் தலைவராகக்கொண்ட யாழ். மாநகரசபை!

அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு பிரதமர் தயாராக இருக்கும்போது போராட்டம் எதற்கு என்று பிரதமர் சார்பில் சமன்ஸ் இன்றி ஆஜராகி கேட்டார் மருந்து குடிக்க மாஸ்கோ போகும் தோழர் வி. பொன்னம்பலம்!

தமிழுரிமைகளை வழங்கும் வகையில் அரசியல் சட்டத்தை திருத்தும்படி தீர்மானம் போட்டது சமசமாஜக்கட்சிக்காரரான திரு. பொ. நாகலிங்கத்தைத் தலைவராகக் காண்ட சுன்னாகம் பட்டின சபை!

இப்படி ஆளுங்கட்சியின் எடுபிடிகள் கெஞ்சி மன்றாடி எத்தனையோ தீர்மானம் போட்டுப்பார்த்தும், அவைகூட ஆட்சியாளர்களின் செவிகளில் துளியும் விழுந்ததாக தெரியவில்லை! ஆனால் இவர்களோ மானம் ரோசமின்றிஒட்டிக்கொண்டிருக்கிறார்கள் இவர்களை அரசு கொஞ்ச நஞ்சமாவது மதித்திருக்குமானால் — அரசியல் சட்டத்தை திருத்த ஏதாவது முயற்சியெடுத்திருக்க வல்லவா வேண்டும்? வெறும்கூஜா தூக்கிகளை யார் மதிப்பார்கள்?

நண்பா, உரிமைகளைக்கேட்போர் கெஞ்சி மன்றாடி குழைந்து கூத்தாடிநின்று உரிமைகளைப்பெற முடியாது! கெஞ்சிக் குழைந்து நின்று கேட்பது சலுகைகளைத் தான்! உரிமைகளையல்ல! அந்த வழியில் தான், தமிழர் கூட்டணியின் தலைமையின் கீழ் தமிழ் மக்கள் தங்கள்அரசியல்உரிமைகளை தன்மான வழியில் நிமிர்ந்து நின்று சிங்கள அரசாங்கத்தை நோக்கித் தட்டிக் கேட்கிறார்கள்! உரிமைகளைப்பெற கடந்த ஓராண்டாக அரசியல் இயக்கங்களை கிளர்ச்சிகளை நடத்திவருகிறார்கள்!

குடியரசு அரசியல் திட்டம் எனும் கொடிய சட்டம் இந்நாட்டில் முதல் தடவைகளாக புகுத்தப்பட்ட நாளாகிய கடந்த ஆண்டு மே 22ம் நாளை, ஹர்த்தால் நாளாக, துக்க நாளாக ஈழத்தமிழினம் அனுட்டித்தது! அநியாயச் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக மே 22, 23, 24 ஆகிய நாட்களில் பாடசாலைகளுக்கு செல்லாது பகிஷ்கரிப்பு நடத்தினர் தன்மான மிக்க தமிழ் மாணவ மாணவியர்!

கடந்த மே 22ந் திகதி தொடங்கப்பட்ட அரசியல்சட்டஎதிர்ப்புப்போராட்டம், தமிழினத்தின் விடுதலைப்போராட்டம்— மங்காமல் மறையாமல்—துவளாமல் — சோராமல், மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக வளர்ந்து வருகிறது! கடந்த ஓராண்டாக குடியரசு அரசியல் சட்டம் வந்த நாள் முதல் நம்முடைய கவிஞர் காசி ஆனந்தனும் மற்றும் பல இளைஞர்களும் தங்கள் வாழ்வை தமிழினத்துக்காக அழித்துக்கொண்டு சிறைச்சாலைகளைத் தவச்சாலைகளாக ஆக்கிக்கொண்டு, தமது மாபெரும் தியாகத்தால், தமிழீழ விடுதலைப்போருக்கு எருவாகிக் கொண்டு இருக்கிறார்கள்!

இந்நிலையில் குடியரசு நாள் கொண்டாடப் போகிறார்களாம் கோலேந்திகள்! அவர்களின் எடுபிடிகளும் தமிழ் ஈழத்தில் விழா எடுக்கப் போகிறார்களாம்! தமிழினத்தவர்கள் ஆட்சியாளர்களும் அவர்களது எடுபிடிகளும் எடுக்கும் குடியரசு விழாக்களையும் கொண்டாட்டங்களையும் முற்றாக பகிஷ்கரிக்கவேண்டுமென தமிழர் கூட்டணிகோரியுள்ளது. தமிழர் கூட்டணியின் எந்தக்கட்டளையையும் தமிழினம்இதுவரை புறக்கணித்ததில்லையே!

தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைவலியுறுத்தும் வகையில்மே 22ம் நாள் தமிழ்ஈழத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் தமிழினத்தின் விடுதலைக் கொடியாகிய உதயசூரியன் கொடியை பறக்கவிட விருக்கிறது தமிழர் கூட்டணி! இந்தக்கொடி யேற்று விழாக்களில்தமிழினம்பெருவாரியாக கலந்துகொண்டு புதிய அரசியல் திட்டத்தை என்றென்றும் ஏற்றிடப் போவதில்லையென்று உறுதியெடுத்துக் கொண்டு, இன விடுதலைக்குப்போராட திடசங்கற்பம் செய்திடவேண்டும்!

ஆம், அரசியல் திட்டத்தை திருத்தும்படி ஆட்சியாளரை கடந்த ஓராண்டாக கேட்டுக் கேட்டு அலுத்துவிட்டது தமிழினம், கேளாச் செவியர்களாக இருக்கிறார்கள் அவர்கள்; உரிமை கிளர்ச்சியை அடக்கிட இளைஞர்களை சிறையில் தள்ளுகிறார்கள் அவர்கள்; இனி தமிழினம்தன் விடுதலைக்கு தனது சொந்த வழியைக்காண வேண்டியதுதான்! தமிழீழத்தை உருவாக்கும் செயல் திட்டங்களைவகுத்து அந்தப் பாதையில் செயற்பட வேண்டியதுதான்! இனி வேறு வழியே இல்லை தமிழர்களுக்கு...!

எனவே மே 22ல் தமிழினம் எடுத்திட வேண்டிய சபதம் —

"தமிழர் குடிக்கோர் கொற்றம் காண்போம்! தமிழ்க் குடியரசினை நிறுவியே தீருவோம்"

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# அடுத்த வழி இதுதான்!

இந் நாட்டில் வாழும் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் சம்மதத்தைப்பெறாத அரசியல் திட்டம்-தமிழ் மக்களின் மொழி, இன, ஆட்சி உரிமைகளையும் ஏனைய அடிப்படை உரிமைகளையும் அங்கீகரிக்காது தமிழினத்தை தாழ்வு நிலைக்குத்தள்ளி அடிமைப்படுத்தும் அரசியல் திட்டம் - இந்நாட்டில் திணிக்கப்பட்டு இந்த ஆண்டு மே 22 உடன் ஓராண்டு ஆகப்போகிறது.

புதிய அரசியல் சட்டத்துக்கு தமிழ்மக்களின் பெரும் பான்மையான பிரதிநிதிகள் ஒப்புதல் அளிக்கவில்லை-தமிழினம் ஒப்புதல் அளிக்கவில்லை-புதிய அரசியல் திட்டத்தை ஆக்கிய அரசியல் நிர்ணய சபையையே தமிழர் பிரதிநிதிகள் பகிஷ்கரித்து வெளியேறினர்கள்.

அப்படியிருந்தும் தமிழ்த்தேசிய இனத்தின் வலிமையான எதிர்ப்பை அலட்சியம் செய்துவிட்டு - தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை தானே ஏற்றுக்கொண்டு புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கியது சிங்களப் பெரும்பான்மையினரைக் கொண்ட ஆளுங்கட்சி.

ஓர் இனம், தனது தலைவிதியை தானே முடிவுசெய்து கொள்ள வேண்டுமே தவிர மற்றோர் இனத்துக்கு அந்த உரிமை அறவே கிடையாது. இந்த அடிப்படை உரிமையை மறந்துவிட்டு, தமிழ் மக்களின் தலையில் குதிரைவிட முனைந்திருக்கிறது சிங்களப் பெரும்பான்மையினரைக்கொண்ட சிங்கள ஆட்சி.

புதிய அரசியல் திட்டம் நிறைவேற்றப்பட்டபோதும்—அதையடுத்து கடந்த ஓராண்டாகவும், அரசியல் சட்டத்தை திருத்தும்படி தமிழ்த் தேசிய இனம் ஒரு குரலில் அரசாங்கத்தை வலியுறுத்தி வந்திருக்கிறது.

தமிழர் கூட்டணி அரசியலமைப்பைத் திருத்துவதற்கு தமிழினத்தின் சார்பில் ஆறு அம்சத் திட்டமொன்றைச் சமர்ப்பித்தது—தமிழினத்திலுள்ள கட்சி சார்பற்ற அறிஞர்கள், சட்ட நிபுணர்கள், போன்ற பலர் அரசியல் சட்டம் திருத்தப்பட்டு தமிழின உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று எத்தனையோ கோரிக்கைகளை விடுத்தனர். ஆளுங்கட்சியை அண்டிப் பிழைக்கும் தமிழர் சிலர் கூட அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றனர்!

ஆனல் இவையத்தனையும் விழலுக்கிறைத்த நீராகிவிட்டது. அரசியல் சட்டத்தை திருத்தவேண்டும் என்ற தமிழினத்தின் கோரிக்கைக்கு சிங்கள அரசு கடந்த ஓராண்டாக துளியும் செவிசாய்க்க மறுத்துவிட்டது.

தமிழினத்தின் இந்தக் கோரிக்கையை அரசின் கவனத்துக்கு கொண்டுவருவதற்காக சன்நாயக முறையில், அஹிம்சாவழியில்—அமைதியான கிளர்ச்சிகளை, ஹர்த்தால்களை ஊர்வலங்களை, கண்டனக் கூட்டங்களையெல்லாம் நடத்திப் பார்த்தாகிவிட்டது. இவற்றை தனது ஆயுதபடைகளைக் கொண்டு நசுக்க முயன்று—ஏராளமான தமிழ் இளைஞர்களை சிறைக்குள் தள்ளி அரசு அடைத்துவைத்திருக்கிறதே தவிர தமிழ் இனத்தின் உணர்ச்சிகளை புரிந்துகொள்ள மறுக்கிறது-புரிந்துகொள்ளாததுபோல நடிக்கிறது.

புதிய அரசியல் சட்டத்தை முன்வைத்து — ஆட்சியாளர்களுக்கு சவால்விடுத்து—தமது காங்கேசன்துறை பா. உ. பதவியை ராஜினுமா செய்தார் தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா. எட்டு மாதங்களாகியும் அந்தத் தேர்தலை நடத்தாமல் தமிழினத்தின் உணர்ச்சியை கிள்ளியெறிய அரசு முயன்று வருகிறது.

இந்நிலையில், மேலும் மேலும் இந்த அரசாங்கத்திடம் புதிய அரசியல் சட்டத்தை திருத்தும்படி கேட்டுக்கொண்டிருப்பதில் கிஞ்சிற்றும் பயனில்லையென்றே நாம் கருதுகிருேம். இனித் தமிழினத்துக்குள்ள ஒரேவழி தனது மறுக்க முடியாத அடிப்படை உரிமையாகிய சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி, தனது அரசியல் திட்டத்தை தானே உருவாக்கி, தனது தன்மானத்தையும் சுதந்திரத்தையும் மீட்டுக்கொள்வது ஒன்றே ஒன்றுதான்!

இது சுலபமான வழியல்ல—மிகமிக கஷ்டங்களையும் சோதனைகளையும் நெருக்கடிகளையும் சந்திக்கவேண்டிய வழிதான். ஆனல் தன்மானத்தோடு, தனித்துவத்தோடு வாழவேண்டுமானல் தமிழினத்துக்கு இதைவிட வேறு வழியே இனிக் கிடையாது.

இந்த நிலைக்கு தமிழ் மக்கள் தாமாகவே செல்லவில்லை அரசாங்கத்தின் போக்கே தமிழ் மக்களை இந்நிலைக்குத் தள்ளுகிறது என்பது வெளிப்படையானது.

இத் திட்டத்தைத்தான் திரு சி. சுந்தரலிங்கம் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுவுக்கு முன்வைத்துள்ளதாக அறிகிறேம் இதுபற்றி தமிழர் கூட்டணி இவ்வாரம் ஆராயவிருக்கிறது.

தமிழர் கூட்டணி இத்திட்டத்தை உடனடியாக ஏற்கலாம்—அல்லது ஒத்திவைக்கலாம். ஆனல் இதுவே உலக அபிப்பிராயத்தையும், சிங்கள மக்களின் மனச்சாட்சியையும் உசுப்பிவிடுவதற்கு இனி தமிழினத்துக்குள்ள ஒரேவழியென்பதில் கிஞ்சிற்றும் தடையில்லை.

# தமிழ்மக்களின் மொழிஉரிமை அமைச்சர்கையில்கூட இல்லை

## அற்ப உத்தியோகத்தர்களின் ஆணவத்தில்தான் தங்கியுள்ளது!

( கா. பொ. இரத்தினம் பா- உ. )

தமிழ் மக்களுடைய மொழி, உரிமை சட்டம்—நீதிமன்ற மொழிச் சட்டம் என்பவற்றை நடைமுறைப் படுத்தும் அதிகாரம் கேவலம் ஓர் அமைச்சரின் கையில்—அவரின் விருப்பு வெறுப்பில் கொடுக்கப்பட்டுள்ள அற்பசலுகையைத் திரு. ஏ. சி. நடராசா அவர்கள் (சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னைநாள் உபதலைவர்) சுட்டிக்காட்டிக் கண்டித்தார்.

அமைச்சரின் கையில் கொடுக்கப்பட்டாலும் பேரளவுக்குத்தான் அமைச்சர் பொறுப்பானவர். விரும்பியபடி நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தீவிர சிங்கள வகுப்புவாதச் சிறுமதி நிறைந்த அற்ப உத்தியோகத்தர்களிடமே உளது.

ஆம், தமிழரின் மொழி உரிமையைக் கொடுப்பதும் குறைப்பதும் மறுப்பதும் மறைப்பதும் இந்த உத்தியோகத்தர்களின் மனப்பாங்கையே பொறுத்தது. எந்தத் தமிழ் உரிமையைக் கொடுத்தலையும் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு மாறனது, முரணனது என்று இவர்கள் சுட்டிக்காட்டி விட்டால் தமிழுக்கு எந்த உரிமையும் இல்லாமல் போய்விடும்.

### இதற்குச் சான்றுகள் வேண்டுமா?

(1) தேசிய அரசுப் பேரவையில் அரச கரும மொழி ஆணையாளர் தமிழ் மொழிக்குச் செய்த 'துரோகம்' பற்றி நான் 6-3-73ஆம் திகதி கேட்ட மூன்று கேள்விகளையும் அதற்கு அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்கா கொடுத்த பதிலையும் வாசித்துப் பாருங்கள்! (அஞ்சாட்டு 6-3-73 நிரல் 793—799)

(2) தேசிய அரசுப் பேரவையில் நான் 9-3-73 கேட்ட கேள்விக்கு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் கொடுத்த பதிலையும் பாருங்கள்;

### நான் கேட்ட வினு:

(அ) 2-1-73 இல் தேசிய அரசுப் பேரவையில் அவர் பற்றுச் சீட்டுக்களைத் தமிழில் கொடுப்பதற்கு தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் முற்றாக அனுமதிக்கவில்லை. 1966 தொடக்கம் இருந்து வரும் இந்த ஒழுங்கு விதிகள் நடைமுறையில் தொடர்ந்து இருந்து வருகின்றன. என்று கூறினர் என்பதை அறிவாரா?

(ஆ) இந்த ஒழுங்கு விதிகளில் எப்பகுதிகள் தமிழில் பதிவு அஞ்சல் பற்றுச்சீட்டுக் கொடுப்பதைத் தடைசெய்கின்றன என்பதை அவர் கூறுவாரா?

(இ) (i) அஞ்சல் நிலையங்கள் ஆங்கிலத்தில் பதிவு அஞ்சல் பற்றுச்சீட்டுக்களைக் கொடுத்து வருகின்றன என்பதையும்;

(ii) கொழும்புச்செயலக அஞ்சல் அலுவலகம் தமிழில் முகவரியிட்ட பதிவுக் கடிதங்களுக்குத் தமிழில் பதிவு அஞ்சல் பற்றுச் சீட்டுக் கொடுக்க மறுத்ததுமட்டுமன்றி அவற்றுக்கு ஆங்கிலத்தில் பற்றுச்சீட்டுக் கொடுத்துள்ளது என்பதையும் அவர் அறிவாரா?

(ஈ) (i) இவ்வாறு ஆங்கிலத்தில் பற்றுச்சீட்டுகொடுப்பதற்கு அவர் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளேனும் பிற சட்டங்களேனும் சட்ட உரிமை வழங்குகின்றனவா என்பதையும்;

(ii) தமிழில் கொடுப்பதற்கு மட்டும்தான் சட்ட உரிமை தேவையா என்பதையும் அவர் கூறுவாரா?

(உ) தமிழில் பற்றுச்சீட்டுக்கொடுக்குமாறு அஞ்சல் நிலையங்களை அவர் பணிப்பாரா?

இதற்கு ஆங்கிலத்தில் அமைச்சர் திரு. குமாரசூரியர் கொடுத்த மறுமொழி: Yes. By Treasury circular no 686 of 26th March 1966 instructions have been issued to Government departments to ensure that the Tamil Language (special Provisions) Regulations of 1966 are implemented. In seeking clarification for implementation of the regulations the commissioner of the Official Language affaire has been consulted and he had directed by letter dated 11th April 1967. That when receipts are issued for registered letters received at post offices in areas outside the Northern and Eastern Provinces the receipt should be in Sinhala irrespective of the Language of the letter tendered for registration, and in the Northern and Eastern Provinces Tamil could also be used without prejudice to the official Language. ...............

(அஞ்சாட்டு 9-3-73,) நிரல் 1245—1248)

இந்த மறுமொழி எதனை நிறுவுகிறது; தமிழில் முகவரியிட்ட பதிவுக்கடிதங்களுக்குச் சிங்களப்பற்றுச்சீட்டுக் கொடுக்கும் படி பணித்தவர் அமைச்சரன்று; அரசகரும மொழி ஆணையாளரே யாவார்.

---

### ஊர்வலம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டையை மைதானத்தை மாலை வந்தடையும்.

அதையடுத்து கோட்டை மைதானத்தில் நடைபெறவுள்ள தமிழர் கூட்டணியின் பொதுக்கூட்டத்தில், கூட்டணி பா. உ.க்களும் தலைவர்களும் பங்குபற்றுகிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை இடைத்தேர்தலும்

## கம்யூனிஸ்டுகள் படிக்க இருக்கும் பாடமும்!

கே. எஸ். ஏ. கபூர்

ஏந்த வேலையுமே இல்லாத வாழா வெட்டிக்கு எப்போதுமே எதிர் வீட்டுச் சன்னலைப் பார்த்து ஏங்கிக் கொண்டிருப்பதிலே ஒரு சுய திருப்தி. பூவைத் தலையிலும் புருசனை உளளத்தின் ஆழத்திலுமாக வைத்துப் பூஜித்துக் குடும்பம் நடத்திடும் பத்தினிக்கும் பத்தினியான குலமகளின் ஒவ்வொரு அசைவிற்கும் புதிய புதிய அர்த்தங்களை வலிந்து தேடியும், காண முடியாததை—கண்டு விட்டதாக எண்ணி முணு முணுத்துக் கொள்வதில் எமது பொதுவுடமைத் தோழர்களுக்கு ஒரு தாக சாந்தி.

தாம் அனுபவிக்க முடியாத இன்பங்களை — தமிழினத்தின் ஏகபோக ஆதரவை எவரோ (தமிழரசு) அனுபவித்துக்கொண்டிருக்கின்றனரே என்பதால் ஏற்படும் எரிச்சலும்—புகைச்சலும் — பெருமூச்சும் அவர்களை நிலையிழக்கச் செய்தும் — நெறியிழக்கச் செய்தும் வெறி கொள்ளத் தூண்டியிருக்கின்றது. அதனால் ஏற்பட்ட ஊரலைத் தணித்துக்கொள்ள அரசியலுக்கு அவசரமில்லாத அனுச்சாரமான அறிக்கைகள் விட்டும் — மேடைகளிலே பேசியவைகளையே திரும்பத் திரும்ப பேசிக் கொண்டிருக்கும் தோழர்களையுமே தினம் தினம் நாம் சந்திக்கின்றோம்.

### மலிவான விலைபொருளல்ல தமிழினத்தின் விடுதலை உணர்ச்சி

அறிக்கைகளால் — அரசியல் பேச்சு என்ற போர்வையால் தம்மைத் தியாகி என்று அறிமுகப்படுத்திக் கொண்டுவரப்போகும் காங்கேசன்துறை இடைத் தேர்தலுக்காக ஓடேந்தி வாக்குப் பிச்சை கேட்க— தமிழினத்தின் கடந்த கால ஜீவ மரணப் போராட்டங்களுக்குத் துளியேனும் சொந்தம் கொண்டாட முன் வராத பொதுவுடமைத் தோழர்கள், உலகில் நீதி—நேர்மை — சத்தியம் — தியாகம் எல்லாம் செத்தொழிந்து விட்டதாகவே தப்புக்கணக்குப்போட்டுக்கொண்டு தேர்தல் களம் காணத்துணிந்திருக்கின்றார்கள்.

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளெல்லாம் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளால் காலத்திற்குக் காலம் மாறி மாறி மிருகத்தனமாக கபளீகரம் செய்யப் பட்டு வரும் போதெல்லாம் ஏனோ—தானோ என்று மூலையிலே முடங்கிக் கொண்டு, தம் தலைமைப்பீடத்திடம் 'சபாஸ்' வாங்குவதே உயர்ந்த லட்சியம் என்று கொள்கை பேசிக்கொண்டிருந்தவர்கள்தான் இன்று வாக்குச் சீட்டுக்கு உரிமை கொண்டாட பத்திரிகைகளிலே தம்மை விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அந்தளவுக்கு தமிழினத்தின் அரசியல் உணர்ச்சிகளை மலிவான விலைப் பொருளாக்கக் கனவு கண்டு கொண்டிருக்கின்றார்கள். கால்களே இல்லாமல் ஓட்டப்பந்தயத்திற்குத்தனது பெயரைப் பதிவு செய்து கொண்ட அறிவாளியின் துணிவுக்கும் இதற்கும் எந்த வித்தியாசமுமே இருக்க முடியாது.

தன்னின உணர்ச்சி காப்பாற்றப்படவேண்டும்—பொது வாழ்வில் தர்ம நியாயங்கள் மதிக்கப்பட வேண்டும்—அரசியல் நெறி முறைகள் பேணப்பட வேண்டும்—மக்களின் அடிமைத்தளை உடைக்கப்பட்டுத் தியாக வரலாறு காண வேண்டும் என்பதில் என்றைக்குமே அக்கறையில்லாத தோழர்கள் எந்தக்கொள்கையோடு வாக்காளர்களைச் சந்திக்கத் துணிந்தார்கள் என்பது உலகப்பெரும் அதிசயங்களில் ஒன்றாகவே தென்படுகின்றது. அரசியலில் எதை வேண்டுமானாலும் — எப்படி வேண்டுமானாலும் பேசலாம் நடக்கலாம் என்பது கொள்கையுமல்ல — ஒரு லட்சியமுமல்ல. இத்தீவுக்கொவ்வாத ஓர் தவறான அணியில் சிலர் தம்மை இணைத்துக் கொண்டதுமல்லாமல் ஒரு இனத்தையும் தோழர்களின் அரசியல் ஈனத்தனத்தோடு இணைத்துவிட சிலரால் கையாண்டு வரும் முறைகள் தமிழினத்தின் மனதில் மாறாத புண்ணை உண்டாக்கும் நீசச் செயலாகும்.

அரசியலில் விழிப்புணர்ச்சி பெறாத அக்காலத்திலேயே பொருளாதாரம்—பொருளாதாரம் என்ற பொழுது போக்குப் பேச்சாளர்களால் ஏமாற்ற முடியாத காங்கேசன்துறை மக்களை, தோழர்களின் சாயம் வெளுத்த பின்பு நிதானம் தவறி விடுவார்கள் என்பது எமது அறியாமையையல்லவா வெளிக் காட்டும்!

கடந்த பொதுத் தேர்தல்களிலே தடம் புரண்டு உருண்டவர்களுக்கு — அரசியலில் ஷீணதிசையடைந்த பொதுவுடைமைத் தோழர்களுக்கு அன்று பட்ட காயம் மாறுமுன்பேமீண்டும் இப்படி ஒரு அரசியல் நப்பாசையா? என்று நினைக்கும்போது ஏற்படும் நகைப்பை மறைக்க முடியவே இல்லை. நமது மத்தியிலே நடக்கவிருக்கும் இந்த இடைத் தேர்தல் இலங்கை வாழ் முப்பத்தைந்து லட்சம் தமிழ் பேசும் மக்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கக் கூடியது — சிங்கள அரசியல் படைக்கப்பட்ட ஒருதலைப் பட்சமான அரசியல் சட்டத்திற்கு ஆணித்தரமான எதிர்ப்பை அகில உலகறிய எடுத்துக் காட்டிடும் மிகப் பெரும் பொறுப்பும் பணியும் — கொள்கையில்லாத அரசியல் சந்தர்ப்ப வாதிகளுக்குக் குழிபறிக்கும் கடமை—இத்தனை சுமைகளையும் ஒருங்கே தாங்கிய காங்கேசன்துறை மக்கள் பாக்கியசாலிகள். வேறு யாருக்குமே கிடைக்க முடியாத வெற்றி [illegible] அவர்களின் கரங்களிலே தவழ்வதை நாம் இப்போதே மானசீகமாகக் காண்கின்றோம்.

### இப்படியும் ஒரு சபதம்

மனித குலத்திற்கு இயற்கை அன்னை வழங்கியிருக்கும் ஒளி விளக்குத்தான் மனச்சாட்சி அரசியலில் மக்கள் தொண்டே தம் வாழ்வாகத் தத்தெடுத்துக் கொண்ட காந்தி, லெனின், செல்வா போன்ற பெரியார்கள் எம்மாதிரியான சிக்கலான நிலையிலும் தம் ஒளி விளக்கு அணையவிடாமல் காத்து — மக்கள் வாழ்வையும் அரசியலையும் நெறிப் படுத்தி நிறை கண்டிருக்கின்றார்கள். ஆனால் எமது தோழர்கள் தெரிந்தோ தெரியாமலோ சர்வதேச அரசியலில் தம்மைக் குருட்டுத்தனமாகக் கற்பனையில் இணைத்துக்கொண்டு தன்னின உணர்ச்சிகளைக் களைந்தொதுக்கிவிட்டு — மனச்சாட்சி என்ற அவ்வொளி விளக்கை அரசியல் பெருமூச்சால் ஊதி அணைத்து விட்டு — அரசியலைச் சாக்கடையாக்கி அதிலே நீந்திக் குளித்துவிட்டு — அதன் சகதியைப் புனிதமான சந்தனமென்று கூறிக்கொண்டு மக்கள மத்தியிலே வலம்வந்து கொண்டிருக்கின்றார்கள்?

எமது பொருளாதாரம் படைக்கும் தொழிலாளர் இனம் தம் கால்களில் பூரணமாகப் பாதரட்சை அணிந்து கொள்ளும்வரை எவது பூப்போன்ற பாதங்களும் பாதரட்சைகளை ஏற்றுக்கொள்ளாது என்று வீரசபதமெடுத்த தோழர் வி. பி. அவர்கள் — தொழிலாளர் இனம் ஈழத்திலே இல்லாத மருத்துவத்திற்காக ரஸ்யா சென்று வைத்தியம் செய்து கொள்ளும் வாய்ப்புக்கள் ஏற்படும்வரை, என்னைக் கல்லறையே காணிக்கையாகக் கேட்டு நின்றாலும் வைத்தியத்திற்காக வெளிநாடு போகமாட்டேன் என்று தொழிலாளர் இனம் புகழ இறுதிவரை விடாப்பிடியாக வீர சபதமெடுத்து நின்றால் தோழரின் சுயரூபத்தை மக்கள் பரவலாகக் கண்டிருக்க முடியாது.

செருப்புக்காக எடுத்த சபதம் — தோழரின் சுற்றுலாவுக்கு விதிவிலக்காகி விட்டதா? தன்னுடைய வீர சபதத்தைத் தன்னாலேயே காப்பாற்றிக்கொள்ள முடியாத தோழருக்கு தமிழினம்—தொழிலாளர் இனம் அரசியலில் எப்படியான முத்திரையை அவர் நெற்றியிலே குத்திவிட்டிருப்பார்கள் என்பதை நாம் விளக்கித்தான் அவருக்குப் புரியவைக்க வேண்டுமென்ற அவசியமில்லை என்றே நம்புகின்றோம்.

பொதுவுடமை வாதிகளின் சோதிடம்.

தமிழரசும் — காங்கிரசும் கூட்டாக இணைந்து அடக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்கு புதிய முறுக்குடன் போர்க்கொடி உயர்த்தத் துணிந்தபோது —உங்களுக்கு மட்டும்தானா விடுதலைப் போராட்டம் சொந்தம்—இதோ நாங்களுமிருக்கின்றோம் என்று உரிமை பாராட்டி இணைய வேண்டிய எமது தோழர்கள், அரசியலில் கிளி சோதிடக்காரர்களாகி அறிக்கைகள் விட்டு கேலிபண்ணிக் கொண்டிருந்தார்கள் இவர்கள்.

கூட்டணி தலைவர் தெரிவில் தலை கவிழப் போகின்றார்கள்— பொதுச் செயலாளர் பிரச்சினையில் சிக்கலடைந்து சீர்குலையப் போகின்றார்கள் — தமிழரசில் முன்பிருந்த அடக்கமும் கட்டுப்பாடும்—தலைவரின் ஆணைக்கு ஆர்த்தெழும் போர்க் குணமும் பட்டுப்போகும்—கடைசியில் சிறு சிறு குழுக்களாய் விலகி, குத்து வெட்டுக்காளாகி வழுக்கி விழப் போகின்றார்கள் என்றனர் அன்று. ஆனால் இன்று தம் கிளி சோதிடம் பொய்ப்பித்து விட்டதே என்ற ஏக்கத்தால் — மூக்கறுப்பட்டு வேதனையால் துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அவ்வப்போது எமது கூட்டணி நடைமுறைப்படுத்தும் திட்டங்களும்— செயல் முறைகளும் மாசுமறுவற்றது — தேவையானது என்பதைத் தமிழினம் ஏற்றுக்கொண்டு விட்டது ஒரே மனதுடன்!

இலைகளிடையே இளந்தளிரைக் காணும்போது ஒரு இன்பம் தோன்றுகின்றது. மலர்ந்த மலர்களிடையே ஒரு மொட்டைப் பார்க்கையில்-இந்த மொட்டும் மலரும்-மற்ற மலர்களைப்போல் பெரிதாக மணமுள்ளதாக இருக்குமென்ற எண்ணமே தலைதூக்கி நிற்கின்றது. இளந்துளிர் - மலராத மொட்டு - முதிராத பிஞ்சு இவைகள் தம் வளர்ச்சியைத்தான் காட்டி நிற்கின்றன. வளர்ந்து முதுமை பெற்று இது இவ்வளவுதான் என்கின்ற நிலையைவிட, மேலும் வளர்ந்துகொண்டே இருக்கும் என்பதில் எங்களுக்கு நமபிக்கை அதிகமிருக்கின்றது.

விடுதலை உணர்விலும்-கூட்டணி வளர்ச்சியிலும் நிச்சயம் தமிழினம் வெற்றி பெறும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. தீர்க்கதரிசி-தியாகச்சுடர்- ஈழத்து காந்தி-பார்போற்றும் பெரியவர்-தமிழ்தந்த தானைத் தலைவன் செல்வா அவர்களின் தலைமையிலே கொள்கைக் குன்றுகளாய் வழிநடக்கும் தமிழ்பேசும் மக்களுக்கு விடுதலை இருக்கின்றது — வாழ்விருக்கின்றது — வளர்ச்சி இருக்கின்றது என்ற நம்பிக்கையும் நெஞ்சம் நிறைய இருக்கின்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் (9)

'உன்னை யாராவது புகழும் பொழுது மகிழ்ச்சியடையாதே. அதே போல உன்னை இகழும் பொழுது கவலையுமடையாதே. இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் சமமாக கருதுபவன் எவனோ அவனே மன அமைதி பெறுவான்' என்று எங்கயோ யாரோ கூறிய வாக்கியத்தைத் தன் வாழ்வில் நடைமுறைப்படுத்தி வந்தான் வாசுதேவன். இதன் காரணமாகவே யார் எதைச் சொன்ன பொழுதும் அது பற்றி அக்கறை கொள்ளாது ஒரு துறவி போன்று இருந்தான். ஆனல் ராதாலட்சுமியுடன் பழகும் பொழுது மட்டும் அவனே அறியாத ஒரு ஆனந்த மனோநிலை அவனுள் உருவாகி வந்தது. அப்படி ஒரு நிலையை அவன் மனதில் உருவாக்கி வந்தவளே ராதாலட்சுமிதான். அதன் விளைவாக ஏற்பட்ட உற்சாகத்தில் ''வெறும் வழித்துணைக்கு வருகின்றேன். ஆனல்...'' என்று அவன் கூறிய பொழுது பதிவாளரின் கார் வந்து நின்றதும் அதிர்ச்சியடைந்தான்.

'என்ன பஸ் இன்னமும் வரவில்லையா? நான் யாழ்ப்பாணம்தான் போகின்றேன். உங்களுக்கு 'லிவ்ட்' தருகின்றேன். கமோன்' என்ருர்.

வாசு சமயோசிதமாகவும் நிதானத்துடனும் என்றும் நடந்துகொள்பவனுகையினுல் பின் கதவைத் திறந்து ராதாலட்சுமியை ஏறும்படி கூறிவிட்டு, முன் ஆசனத்தில் பதிவாளர் பக்கத்தில் தானும் ஏறி அமர்ந்து கொண்டான். அவனுடைய பண்புடைமை ஒவ்வொரு செயலிலும் பளிச்சிட்டு மின்னுவதை உணர்ந்து மெய் சிலிர்த்தாள் ராதா.

ஆனுலும் அவள் உள்ளத்தில் ஏதோ ஒரு தவிப்பு. அவன் சொல்ல வந்த விடயம் முற்றுப் பெருமல் இடையில் நின்றுவிட்டதே என்ற அரிப்பு மனதைக் குடைந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவள் நினைக்கும் விடயங்கள் இடையில் தடைப்பட்டுப் போகின்றதே என்ற ஒரு பயம் அவள் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

'என்ன தம்பி பரீட்சைக்குப் படிக்கின்றீரா?' என்ருர் பதிவாளர்.

'யெஸ் சார்'.

'பேராதனையில் தங்கிப் பரீட்சை எடுப்பதற்கு ஒழுங்கு செய்துள்ளீரா? அல்லது...' என்று அவர் கேட்ட பொழுது பின்னுலிருந்த ராதாலட்சுமியே அந்தக் கேள்விக்குப் பதிலளித்தாள்.

'உங்களுக்கு பேராதனையில் சொந்த விடிருக்காய்யா?' என்று பின்னுல் திரும்பாமலேயே கேட்டார்.

'யெஸ் சார். அந்த வீட்டில் தங்கிப் போவதற்கு வசதிகள் உண்டு. படிப்பதற்கும் வசதிகளிருக்கு'.

'நல்லது வாசு! நீர் பரீட்சை முடிந்ததும் என்ன செய்வதாக உத்தேசம்?'

'ஆண்டவன் தான் வழி காட்ட வேண்டும். ஸிளரிக்கல் எக்ஸாமில் தெரிவாகியுள்ளேன். சேட்டிவிக்கற் அனுப்பும்படி கேட்டிருந்தார்கள். அனுப்பியுள்ளேன் சார்'.

'குட். நிச்சயம் இடம் கிடைக்கலாம்.' என்று கூறிவிட்டு ஊர் புதினங்கள் பற்றி விசாரிக்கலானுர்.

நாட்கள் வாரங்களாகி மறைந்துவிட்டன. பரீட்சையும் முடியும் தருணத்திலிருந்தது.

மலை முகடுகளில் வெண் பஞ்சுப் பொதியெனத் தவழும் முகிற் கூட்டங்களை திறந்திருந்த யன்னலினூடாகப் பார்த்துக்கொண்டே நின்றிருந்தான் வாசுதேவன். பல நாட்களுக்குப் பின் அன்று காலையில்தான் கதிரவனுடைய ஒளியைக் காணக் கூடியதாக இருந்தது. ஆனுலும் மலைநாட்டில் இயற்கையின் திருவிளையாடல் நிமிடத்தில் நிலைமாறக் கூடியதாயிற்றே. சில நிமிடங்களில் மழைத்துளிகள் பன்னீர்த் துளிகளெனச் சிந்திக் கொண்டிருந்தன. இயற்கையின் அந்த லீலாவிநோதங்களை ரசித்துக் கொண்டிருந்ததினுல், அறையினுள் நுழைந்து பல நிமிடங்களாக அவன் பின்னே நின்றிருந்த ராதாலட்சுமியை அவன் பார்க்கவில்லை.

'என்ன வாசு பரீட்சை தான் முடிந்து விட்டதே? இன்னும் ஒரு பேப்பர்தான். அதற்கும் மூன்று நாட்கள் இருக்கின்றன. என்ன ஒரே சிந்தனையில் மூழ்கிப் போய் விட்டீர்கள்.' என்று கேட்டுக் கொண்டே அவனுக்குப் பக்கத்தில் வந்து யன்னலுடன் சேர்ந்து நின்றிருந்தாள் ராதாலட்சுமி.

'என்ன ராதா? என்ன சொன்னீங்க?' என்ருன்.

'அடேயப்பா! நான் சொன்னதே காதில் விழவில்லையே?' என்று திரும்பவும் கூறினுள்.

'பரீட்சையைப் பற்றி நான் நினைக்கவில்லை ராதா. இயற்கையின் இந்த இனிய சூழலும் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களும் என்னைச் சிந்திக்கத் தூண்டி விட்டன. அதனுல் தான்...'

'சொல்லுங்கள் வாசு; ஏன் நிறுத்திவிட்டீர்கள்.'

'ஒன்ரு இரண்டா சொல்வதற்கு?'

'அடேயப்பா! நீங்கள் கதாசிரியனுக இருந்தால்...'

'கதாசிரியனுக்கு மட்டும் தான் கற்பனையா? ஆழ்ந்து சிந்திக்கும் எவனுக்கும் இயற்கையோடு ஒன்றிவிடும் பொழுது கற்பனை தானே உதிக்க ஆரம்பித்துவிடும். ஆனல் அவை வெறும் கற்பனையல்ல. தனிமனிதனின் வெற்றுரையும் அல்ல. பெரும்பாலும் அறிவு முத்துக்கள் — தத்துவங்கள் இப்படித்தான் பிறக்கின்றன'. என்று கூறிச் சிரித்தான்.

'வாசு! நீங்கள் அப்படி என்ன தத்துவங்களைக் கண்டு பிடித்துவிட்டீர்களாம்?'

'நான் கண்டுபிடித்த தத்துவ விளக்கத்தினைக் கூறினுல் சிலசமயம் நம்மிடையே கருத்து மோதல் தோன்றலாம் ராதா.'

'அப்படி என்னதான் வந்துவிடும்? சொல்லுங்கள் வாசு.'

'ராதா! இந்த மலைநாடு இருக்கே. இது பெரும்பாலும் செல்வந்தர்களை ஒத்தது. எமது ஊர் அதவாது

நமது
தொடர்கதை

யாழ்ப்பாணம் போன்ற வரண்ட பிரதேசமிருக்கே அது சாதாரண மனிதவர்க்கத்திலுள்ள கொள்கைவாதிகளைப்போன்றது.'

'இதுதானு? நான் என்னவோ ஏதோவென்றிருந்தேன்.'

'ராதா! ஏன் நான் அப்படிச்சொன்னேன் என்று நீ கேட்கலையே.'

'கேளுங்கள் கொடுக்கப்படும் என்றில்லையோ. நீங்கள் கூறுங்களேன். நான் தான் கேட்க இருக்கின்றேனே.'

'கேட்பதற்கு ஒரு ஆள் கிடைத்து விட்டது என்பதற்காக நான் அலம்பவேண்டுமா ராதா?'

'ஐயையோ நான் அதற்காகச்சொல்லவில்லை வாசு' நீங்களென்னப்பா நான் ஒன்றைச்சொன்ருல் நீங்கள் இன்றென்ருக நினைக்கின்றீர்களே.'

'நான் வேடிக்கையாகச் சொன்னுல் நீர் வினையாக எடுக்கின்றீரே.'

'நீங்களும் உங்கள் விளையாட்டும். எனக்கு எந்த விளையும் வேண்டாம். உங்களுடன் ஆசையுடன் கதைக்க வந்தால் ஏதாவது சொல்லி என்னை அழவைத்து விடத் தெண்டிக்கின்றீர்களே.'

'இதுதான் நான் சொன்ன தத்துவம் ராதா அடிக்கடி குணம் மாறும் செல்வந்தர்களைப் போன்றது மலைநாடு. திடீரென்று சிரிப்பதும் அந்தச் சிரிப்பு மறையு முன்னரே அழுவதும் இயற்கையின் விளையாட்டாக இங்கே காண முடிகின்றன. சில நிமிட நேரம் நிர்மலமாகத் தெரியும் வானம் திடீரெனக் கருமுகில்களால் சூழப்பட்டு இடியும் மின்னலுமாகக் குமுறுகின்றது. எப்பொழுது என்ன நடக்கும் என்று சொல்ல முடியாத நிலை. இப்படித்தான் பணக்காரர்கள்.'

'ம். அப்புறம்?'

'வரண்ட பிரதேசத்தில் ஒரேயடியாய் வெயில் அடிக்கும். இருந்துவிட்டு எப்பொழுதாவது மழை வரும் வந்தால் சில நாட்கள் நீடித்து நிற்கும். மலைநாட்டைப் போன்று திடீர்ச் சூழ்நிலை அங்கில்லை. அதுபோன்றவன்தான் கொள்கைவாதியான ஏழை.'

'அடேயப்பா! அந்த வரிசையில் என்னையும் சேர்த்துத்தான் கூறுகின்றீர்கள்.'

'ஷ் சுயர். வேறு எப்படிச் சொல்ல முடியும்?'

'வாசு! என்னை...என்னை...' என்றவளால் மேலே பேச முடியவில்லை. இருவிழிகளிலிருந்தும் முத்துக்களென உருண்டோடின கண்ணீர்த் துளிகள்.

'ராதா! என்ன இது? நான் ஏதாவது உளறினுல் அது உண்மையா? குழந்தை மாதிரி எதையும் நம்பிவிடுகின்றதா? இப்படியென்ருல் நான் இனி எதுவுமே கதைக்கமாட்டேன்.'

'வாசு! என்னுடன் கோபமா?

'கோபமா? அப்படி எனக்குத்தெரிந்தால் இப்படி இருக்கமாட்டேனே.' என்று அவன் ஆத்திரத்துடன் கூறியபொழுது உண்மையிலேயே அவள் சிரித்துவிட்டாள்.

'என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கின்றது? நான் சொன்னதில் என்ன தவறு? நீர் எப்படித்தான் வாதிட்டாலும், மனதை மாற்ற முயன்ருலும் இயற்கையின் நியதியை மாற்ற முடியாது என்பதைச் சில நிமிடங்களில் நிரூபித்துவிட்டீரே ராதா.'

([illegible]ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆட்சியாளரின் அடக்குமுறை அதிகரிக்க விடுதலைப்போராட்டமும் புதிய வேகம்பெறும்'

## தமிழர் கூட்டணி வார துவக்க விழாவில் நாவலர் அமிர், உடுப்பிட்டி சிவா முழக்கம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த உணர்ச்சி மிக்க இளைஞர்கள் சிலரைக் கைது செய்ததன் மூலம் தமிழ் இனத்தின் சுதந்திர உணர்ச்சியை அடக்கி விட்டதாக அரசு தப்புக் கணக்குப் போடுகிறது. ஒரு சிலரைக் கைது செய்து பயமுறுத்தி ஓர் இனத்தின் விடுதலை உணர்ச்சியை அடக்கி விட முடியாது: அடக்கு முறையை அரசாங்கம் எவ்வளவுக் கெவ்வளவு அள்ளி வீசுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு விடுதலைப் போராட்டம் வேகம் பெறும்'

தமிழர் கூட்டணி வாரத்தை கடந்த ஞாயிறன்று காங்கேசன்துறை பட்டின சபை மண்டபத்தில் ஆரம்பித்து வைத்துப் பேசிய தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு முழக்க முட்டார்.

தமிழர் கூட்டணியைச் சேர்ந்த இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. ரி. தம்பித்துரை தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'தமிழ் மக்களை அடிமைப்படுத்த அரசு எடுக்கும் நடவடிக்கைகளை முறியடித்து சுதந்திர தமிழினத்தை உருவாக்க வேண்டுமானால், உறுதியாகப்போராடத்தக்கசமுதாயம் கட்டி வளர்க்கப்பட வேண்டும்; தமிழர் கூட்டணி வாரம் இத்தகைய சமுதாயத்தை உருவாக்க உதவும்;

'அரசாங்கமும், அரசாங்க ஆதரவாளர்களும் இம் மாதம் 22 ஆம் திகதி குடியரசு தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாடும் அதே நேரகத்தில், எம் மக்கள் தம் சுதந்திரத்தை நிலை நாட்ட ஏற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். குடியரசு விழாவையொட்டி நடக்கும் போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டாம் என்று நாம் பாடசாலைப் பிள்ளைகளையும், பெற்றோர்களையும் கோர இருக்கிறோம். குடியரசு விழாவையொட்டி அரசாங்க ஆதரவாளர்கள் பொலீசாரை கொண்டு ஊர்வலம் நடத்தட்டும் அதைப்பற்றி எமக்குக் கவலையில்லை. முற்று முழுதாக தமிழ் மக்கள் குடியரசு தினத்தைப் பகிஷ்கரிக்கிறார்கள் என்பதை உணர்த்தும் வகையில் துக்க தினம் அநுஷ்டிக்க வேண்டும்.

''ஒருசிலரைக் கைதுசெய்ததன்மூலம் தமிழ் இனத்தின் உணர்ச்சி அடங்கவில்லை மேலும் வலுவடைகிறது. எப்போது அந்த உணர்ச்சி வெடிக்குமோ தெரியாது என்று அரசுக்கு கூற விரும்புகிறேன்.

### போராட்டம்

''அரசாங்கம் எம் மீது எவ்வகையான நடவடிக்கை எடுத்தாலும் அதை எதிர்த்துப் போராடத்தக்க சக்தி எமக்கு வேண்டும். எப்படை எம் போராட்டத்துக்குத் தடையாக வந்தாலும் அதற்கு ஈடு கொடுத்து நாம் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்க வேண்டும். அப்போது தான் நாம் சுதந்திரம் பெற்றவர்கள் ஆவோம்.

''இந்த எண்ணத்தை மக்களிடையே வலு வடையச் செய்யவும் இலட்சியங்களை விளங்கப்படுத்தவும் வசதி செய்யும் வகையில் கூட்டணி வாரம் ஆரம்பிக்கப் பட்டு உள்ளது. இந்த வாரத்தில் யாழ். குடாநாட்டின் சகல தொகுதிகளுக்கும் சென்று கூட்டணி தொண்டர்கள் தம் இலட்சியங்களை விளக்குவார்கள். அதற்கு ஏற்ற வகையில் மக்கள் செயல்படத் தயாராக வேண்டும்''

முன்னாள் உப சபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது.-

### தமிழ் இன விடுதலை

''தமிழ் இன விடுதலையை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட கூட்டணி அரசுக்குப் பல நெருக்கடிகளை ஏற்படுத்திச் செயல்பட்டு வருகிறது. கூட்டணி உருவாகிய நேரத்தில் அரசாங்கத்தை ஆதரிக்கும் வடபகுதி பிரமுகர்கள் பேசா மடந்தை பாகி மௌனிகளாக இருந்தனர்.

''கடந்த இரண்டு மாதங்களாக அரசாங்கம் தமிழ் இளைஞர்களைக் கைது செய்தும் மற்றும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டும் வெறியைக் காட்டி உள்ளது. இந்த நேரத்தைப் பயன்படுத்திய அரசாங்க வடபகுதிப் பிரமுகர்கள் தமிழர் கூட்டணியின் போராட்டம் முடிந்து விட்டது எனக் கருதிப் பகிரங்க அறிக்கைகளை விடுவதில் ஈடுபட்டு உள்ளனர். அவர்களை மீண்டும் மௌனிகளாக்க வேண்டுமானால் கூட்டணி பலப்படுத்தப்பட வேண்டும். இதற்கு இந்தக் கூட்டணி வாரம் உதவும்.

---

## தமிழர் கூட்டணி பாடசாலைக்கு ஆதரவு பெருகுகிறது

தமிழ் பிள்ளைகளின் தொண்டைக்குள் பலவந்தமாகச் சிங்களத்தை போதனாமொழியாகத் திணிக்கும் சிங்கள அரசின் இனக்கொலைத்திட்டத்தை முறியடிப்பதற்காகவும், பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிள்ளைகள் தமிழில்படிப்பதற்கு வசதிசெய்து கொடுக்குமுகமாகவும் புத்தூரில் சட்டவிரோதமாக தமிழர் கூட்டணி ஆரம்பித்து நடத்தி வரும் பாடசாலைக்கு தமிழ் பெற்றோர்களும் மாணவர்களும் பெரும் ஆதரவு நல்கிவருகிறார்கள்.

அரசாங்கத்தின் அச்சுறுத்தலைக்கூட பொருட்படுத்தாது இப்போது 67 பிள்ளைகள் இப்பாடசாலையில் படிக்கிறார்கள். சிங்களப் போதனை நடைபெறும் பஞ்சாசிக பாடசாலையின் முதலாவது வகுப்பில் படித்த மாணவர் பலரும் தமிழர் கூட்டணி பாடசாலைக்கு இப்போது வந்து விட்டனர்.

பஞ்சசீக பாடசாலையில் இரு குழந்தைகள் மட்டுமே இப்போது சிங்கள மொழி மூலம் முதலாம் வகுப்பில் படிக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## எட்டு இடங்களில் "புளுகர் பொன்னையா"

இதுவரை இலங்கையின் பலபாகங்களிலும் பதினாறு தடவைகள் மேடையேற்றப் பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்து இரசித்த பிரவுன்சன் இண்டஸ்றீசாரின் வானொலி புகழ் 'புளுகர் பொன்னையா'' நாடகம் இம் மாதம் 17-ம் திகதி தொடக்கம் ஒருவாரத்திற்கு தினசரி மேடையேற விருக்கிறது.

கொழும்பு யாழ் கலையரங்கம் அளிக்கும் புளுகர்பொன்னையா 17-ம் திகதி சங்கானையிலும், 18-ம் திகதி காரைநகர் யாழ்ரன் கல்லூரியிலும், 19-ம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், 20-ம் திகதி தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும், 21-ம் திகதி வேலணை திறந்த வெளி அரங்கிலும், 23-ம் திகதி முல்லைத்தீவு, வட்டுவாகலிலும் மேடையேற விருக்கிறது.

---

## உதயசூரியன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மே 22ம்திகதியன்று குடியரசு அரசியல் திட்டம் நிறைவேற்றப்பட்ட முதலாவது ஆண்டு நிறைவு விழாவை அரசாங்கமும் கோலாகலமாக கொண்டாட ஏற்பாடு செய்துவரும் அதே வேளையில், அந்நாளை ஒரு துக்க நாளாகவும் தமிழினத்தின் சுதந்திரத்தையும் தன்மானத்தையும் நிலைநாட்ட உறுதியெடுக்கும் நாளாகவும், ஈழத்தமிழ் நாடெங்கும் அனுட்டிக்க தமிழர் கூட்டணியின் தலைமையில் தமிழ் மக்கள் முடிவுசெய்துள்ளனர்.

அரசாங்கமும், அரசாங்க ஆதரவாளர்களும் மே 22ம் நாள் நடத்தும் குடியரசு நாள் கொண்டாட்டங்கள், களியாட்டங்கள் எதிலும் தமிழ்மக்கள் பங்குபற்றக் கூடாதென்றும், மாணவர்கள் பாடசாலைகளில் அன்றைய தினம் நடைபெறும் விழாக்களை பகிஷ்கரிக்க வேண்டும் என தமிழர் கூட்டணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

மே 22ம் நாளில் தமிழ் மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து தமிழினத்தின் விடுதலைக்காக பிரார்த்தனை செய்யவேண்டுமென்றும், அன்று அவ்வத்தொகுதிகளில் நடைபெறும் 'உதயசூரியன்' கொடியேற்று விழாவில் பெருவாரியாகத் தமிழ் மக்கள் கலந்துகொண்டு சுதந்திரத்துக்குதொடர்ந்து போராடவும், அடிமை அரசியல் திட்டத்தை ஒருபோதும் ஏற்பதில்லையென்றும் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் தமிழர் கூட்டணி தமிழ் மக்களைக் கோரியுள்ளது.

---

## ஆசிரியர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுமுறை நாளாகிய மே 22ல் பாடசாலைக்குச்சென்று வழமையாகக் கையொப்பமிடும் புத்தகத்தில ஒப்பமிடாது வேறொரு புத்தகத்தில் கையொப்பமிட வேண்டிய நிர்ப்பந்தத்தை ஆசிரியர்கள் மீது இந்நாட்டு அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. இதுவா உண்மையான சனநாயக ஆட்சியென ஆசிரியர்கள் அதிருப்தியடைவதாக அறியப்படுகிறது.

---


### முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் நீலசோப் போல் வேறு சோப்புகள் விற்பனைக்கு வருவதால் மில்க்வைற் நீலசோப் மேலுறைகளைக்கவனித்துவாங்குங்கள்.

இதன் மூலமே உண்மையான மில்க்வைற் நீலசோப்பைப் பெற்று பயன் அடைய முடியும்.

மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை சேகரித்து அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

**த: பெ: இல. — 77, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 இலட்சம் தமிழ் தேசியஇனத்தின் தலைவர் தந்தைசெல்வாவைச் சந்திக்கத் தவறியதேன்?

## இந்திரா காந்திக்குத் தமிழ் இளைஞர் பேரவை கண்டனம்!

உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் செயற்குழுக் கூட்டம் சென்னையில் கலாநிதி இரா. ஜனார்த்தனம் எம். ஏ. அவர்கள் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் அங்கு நிறைவேற்றப்பட்டன:-

1. இலங்கைத் தமிழர் தலைவர் செல்வநாயகம் ஈழத்துக் காந்தி என அழைக்கப்படுபவர்—தமிழ் விரோத இன்றைய இலங்கை அரசை எதிர்த்து காந்திய வழியில் போராட அணைத்துத் தமிழர் கட்சியும் அமைந்துள்ள தமிழ் கூட்டணியின் தலைவர். ''வங்காள தேச'' போரின் போது பாகிஸ்தான் ராணுவம் இலங்கை வழியாக வங்காளதேசம் செல்ல அனுமதித்ததை நாடாளுமன்றத்தில் கண்டித்தவர் இத்தலைவர்.

1949ஆம் ஆண்டிலேயே இலங்கை இந்தியருக்கு குடியுரிமை வழங்கவேண்டும் என்று போராடியவர். பண்டித நேரு, ஜனாதிபதி கிரி ஆகியோர் இலங்கை சென்ற போதெல்லாம் அவரைச் சந்திக்கத் தவறியதில்லை.

அப்பேற்பட்ட தமிழர்தலைவரை பிரதமர் சந்திக்க இசைந்திருந்த ஏற்பாட்டை ரத்து செய்தது கண்டிக்கத் தக்கதாகும்.

இந்தியாவின் நல்ல நண்பரான 35 லட்சம் இலங்கைத் தமிழர்களது தலைவரை பிரதமர் இந்திராகாந்தி சந்திக்காது போனது இலங்கைத் தமிழரை சிங்களவர்களது ஏளனத்திற்கு ஆளாக்கி இருப்பதோடு அவமரியாதைப்படுத்தியும் உள்ளது. இது பிரதமர் இலங்கை இந்தியத் தமிழர் பிரச்சினையில் கொண்டுள்ள அக்கறையற்ற தன்மையையே விளக்குவதாகும் என்று பேரவை தன்



கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

2. பிரதமர் இந்திராகாந்தியின் இலங்கைப் பயணத்தின்போது, ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் 10 சதவீத அளவு அதிகப்படுத்துவதில் காட்டிய அக்கறை ஆயிரத்தில் ஒன்றுகும்.

இலங்கைக் குடியுரிமை பெறும் தமிழர்கள் மொழி, மதம், கல்வி வேலைவாய்ப்பு போன்றவற்றில் உரிமையற்றுள்ள நிலையை மாற்ற எந்த வித முயற்சியும் மேற்கொள்ளப்படாதது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

3: கச்சதீவு-பற்றி பிரதமர், கூறிய கருத்துக்கள் கண்டிக்கத்தக்கது.

வரலாற்று அடிப்படையிலும், பாதுகாப்பு அடிப்படையிலும் கச்சத்தீவு புறக்கணிக்கக்கூடியதல்ல. தென்னாட்டு கட்சிகள் கச்சதீவில் அக்கறை கொண்டிருப்பதில் நியாயமான காரணங்கள் உண்டு. சீனுவோடு இலங்கையின் உறவு எப்படி வேண்டுமானாலும் மாறலாம்.

இந்தியாவைத் தாக்க கச்சத்தீவே சீனுவிற்கு ஒரு தளமாகலாம். இந்தச் சூழ்நிலையில் இந்திராவின் கச்சதீவு பற்றிய கருத்துக்கள் விவேகமானதல்ல.

இந்தியாவின் வட எல்லை பனிப்பகுதிதானே என்பது எப்படிப் பொறுப்பற்ற பேச்சோ அதுபோன்றே கச்சதீவு வெறும் பாறை என்பது. மேலும் கச்சதீவு ஒரு பாறை அல்ல என்பதற்கு கச்சதீவில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் பிரதமருக்கு அனுப்பிவைக்கப்படும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தமிழர்க்குக் கரிநாளே

பல திசையும் புகழ் பரப்பிப்
பாராண்ட எங்கள் இனம்
தரணியெங்கும் புகழ் பெருக்கும்
தமிழ் எங்கள் அன்னை மொழி
அ த்தடுத்து வந்த அந்நியர்கள்
அழித்து விட்டார் எமதரசை
அடிமைகளாய் வாழ்ந்தோம்
மிடிமையிலே துவள்ந்தோம்
அதர்ம மிகு வாழ்வதனை
ஆறெட்டில் வென்றோம்
இருண்ட வாழ்வெம்மை
இனிய னுகாதென எண்ணி
ஆடினோம் பாடினோம்
அக மிக மகிழ்ந்திருந்தோம்.

* * *

''ஆளுகின்றோம்'' என்பதனால்
அதிகார அகந்தையினால்
தன் மானத் தமிழ் இனத்தைத்
தமதடிமை ஆக்கிடவே
நாட்டுக் குழைத்து வரும் — மலை
நாட்டுத் தமிழரது
''வோட்''டைப் பறித்தவரை
நாடற்றோர் ஆக்கி விட்டு
ஐம்பத்தாறும் ஆண்டினிலே — எம்
அன்னை மொழி தமிழினுக்குச்
சரியாசனம் தரமறுத்துப்
''பெரிய'' மனது கொண்டு
சிங்கள மொழியதனைச்
சிம்மாசனம் ஏற்றி வைத்து
எழுச்சி அடைந்தவர்கள்
எழுபத்திரண்டினிலே
தமிழர்தம் உரிமைகளைத்
தட்டிப் பறித்துப் புது
அரசமைப்பு ஆக்கி வைத்தார்
குடியரசும் கண்டு கொண்டார்.

* * *

ஆளும் இனத்தோரே
ஆணவம் மிக்கோரே — எம்
உரிமைகளை எல்லாம்
உதிர்த்து எடுத்து விட்டு
எம்மவர் மண்டைக்குள்
எதுவுமே இல்லை என்று — உம்
குடியரசு தினத்தன்று
குதுகலிக்கச் சொல்கின்றீர்?

* * *

தமிழ் ஈழம் வென்று
தமிழ் இனமும்
தமிழ் மொழியும்
தம் உரிமை பெறும் நாளே
தன்மானம் மிக்க — தம்
தமிழர்க்குத் திருநாளாம்
பொன்னுளாம் அந்நாளை
வென்றெடுக்கும் வரையினிலே
குடியரசு நாளெல்லாம்
தமிழர்க்குக் கரிநாளாம்.

—குகு

### காங்கேசன்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

#### யாரிடம் ஒற்றுமை கேட்கின்றார்கள்?

அரசியல் கோமாளிகளான பொதுவுடமைத் தோழர்கள் தமிழினத்தில் தனிப்பெரும் வல்லரசான தமிழரசை அன்று பார்த்து நீங்கள் பிற்போக்குவாதிகள் என்று கத்தித்திரிந்தது போக -இன்று அதே தோழர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் பார்த்து (ரஷ்யச்சார்பு - சீனச்சார்பு) நீ பிற்போக்கு, இல்லை! நீதான் பிற்போக்குவாதி என்று மாறி மாறி குழாயடிச்சண்டைக்காரர்களாகிக் கொண்டிருப்பதை தினம் தினம் நாம் பார்க்கின்றோம்.

ஆனால் இதே தோழர்கள் எங்களைப் பார்த்து உங்களிடம் ஒற்றுமை இருக்கின்றதா என்று கேட்டால், விபச்சாரி கற்பின் பெருமையைப் பற்றிப் பேசுவதென்றல்லவா பொருள்! அரசியலில் அடிக்கடி ஏமாளிகளைப் பார்த்த மக்கள் - அரசியல் கோமாளிகளைப் பார்க்க வேண்டுமானால் நமது மந்தியிலே உள்ள பொதவுடமைக் கூடாரத்திற்குள் நுழைந்தால்போதும் - வரிசை வரிசையாகக் காணலாம். தங்களுக்கே சொந்தமான 'கோஷ்டிப் பூசல்' உண்மைகளை ஜீரணித்து விட்டு எங்களைப் பார்த்து பொய்யை உமிழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் எம் தோழர்கள்.

மனிதாபிமானங்களைத் தம் சுயநலத்திற்காகச் சாகடித்துக்கொள்ளும் வெறும் அரசியல் பிண்டங்களான எமது தோழர்கள்-நாம் போற்றும் நல்லிதயம் படைத்த தந்தை செல்வா அவர்களினால் கட்டி வளர்க்கப்பட்ட விடுதலை இயக்கத்தில், மக்கள் நம்பிக்கைகொண்டிருக்கின்றார்களா, என்று கேட்கும் கேள்வி, அரசியல் கற்பை எப்படிவேண்டுமானாலும் சூறையாடிவேடிக்கை பார்ப்பதுதான் அரசியல்-பொழுதுபோக்கு என்று நினைத்துச் செயல்படத் துணிந்திருக்கின்றார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது: எனவேதான் சொல்கின்றோம். அவசியமில்லாமல், அரசியல் அரிப்பால் மட்டும் உணர்ச்சிவசப்படாமல்-தியாகத்தின் மூலம் மக்கள்-தொண்டூழியத்தின் மூலம்—ஏற்படும் இலட்சிய உணர்வால் உந்தப்படும்போதுதான் எந்த இயக்கமும் தம் பெருமைகளைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராதையின் நெஞ்சம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

'என்ன செய்துவிட்டேன்.

'உம்முடைய முகத்தினைக் கண்ணாடியில் பாரும். திடீர் என அழுகின்றீர். கண்களின் நீர் வற்றுமுன்னே சிரிக்கின்றீர்.'

'அதுதான் நீங்கள் சொன்ன தத்துவம்.'

'போதும் ராதா. ஏதாவது விளையாட்டாக நான் கதைக்க அது வினையாக முடிந்துவிடுகின்றது.'

'என்னை மன்னித்து விடுங்கள் வாசு.' என்று கூறி அவன் கால்களில் விழுந்து அவற்றைப் பற்றிக்கொண்டாள்.

அவள் அப்படிச் செய்வாள் என்று சிறிதும் எதிர்பார்க்காத வாசுதேவன் திகைத்து விட்டான். சில வினாடி நேரம் என்ன செய்வது என்று தெரியாது மலைத்து நின்றவன் 'ராதா! என்ன இது?' என்று அவளைக் குனிந்து தூக்கிவிட்டான். அவன் விழிகள் கலங்கிவிட்டன.

'ஏன் வாசு இன்னமும் கோபமா?' என்றாள்.

'ராதா! எனக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை; நீ செய்த உதவிகளுக்கெல்லாம் உன் காலில் விழுந்து நன்றி தெரிவிக்க வேண்டியவன் நான்' என்று அவன் கூறிய பொழுது, அவனை மேலே பேச விடாது தனது மலர்க் கரத்தால் தடுத்தாட் கொண்டாள்.

'இல்லை வாசு இல்லை; அப்படியெல்லாம் இல்லை.'

'ராதா! என் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்குமளவுக்கு நீ எனக்கு என்ன செய்துவிட்டாய்?' நான் தான் அப்படி என்ன சொன்னேன்? நீ அழைத்து வந்து இப்படியெல்லாம் உபசரித்ததற்கு நான் செய்ய வேண்டிய கைமாறு உன்னை என் காலில் விழவைப்பது தானா? உன் நலனுக்காகத் தான் நீ கேட்ட பொழுது வந்தேனேயன்றி எனக்காக இல்லை ராதா. நீ இப்படிச் செய்து...'

'வாசு! உங்கள் அன்பைப் பெற வேண்டி இப்படிச் செய்தேனேயன்றி நீங்கள் தவறு செய்தீர்கள் என்றல்ல வாசு. உங்கள் அன்பைப் பரிபூரணமாகப் பெறுவதற்காக காலில் என்ன கடலில் கூட விழவும் நான் தயங்கமாட்டேன். வாசு! என்ன தான் பொருள் வசதி உள்ள குடும்பத்தில் பிறந்து விட்டாலும் நானும் ஒரு பெண்தானே! மற்றப் பெண்களைப் போல எனக்கும் ஆசைகள் உண்டு வாசு. அந்த ஆசைகள் கேவலமானதாக இல்லையாயினும், சாதாரணமான ஒரு பெண்ணுக்குள்ள இயற்கையான ஆசைகள் என் உள்ளத்தில் மட்டும் இருக்கதா? 'பிரன்ட்ஸ்' எல்லாம் என்னையும் உங்களையும் சேர்த்துக் கேலி பண்ணிய பொழுது எல்லாம் எனக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளை எல்லாம் எப்படிச் சொல்வேன் வாசு? ஆத்திரத்துக்குப் பதில் ஆனந்தமடைவேன். இதில் தவறில்லையே வாசு!' அவளுடைய காவிய நயனங்களில் நீர் முத்துக்கள் துளிர்த்து நிற்க ஆவலுடன் அவனைப் பார்த்தாள். அவளுடைய மலர்க்கரங்கள் இரண்டும் துடித்துக் கொண்டிருந்தன.

'ராதா! ராதா! நீ இப்படியெல்லாம் நினைப்பாய் என்று நான் சிறிதும் நினைக்கவில்லை. ஒரே வார்த்தையில் சொல்வதானால் நான் உன்னை அடையக் கொடுத்து வைத்திருக்கணும். ஆனால் நான் பேராசைக்காரனில்லையே ராதா. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட முடியுமா? ரோஜாவைப் பிடுங்க நினைக்கு முன் அதற்குக் கீழே உள்ள முட்களைப் பற்றியும் நினைக்க வேண்டும். அப்படியில்லாதவன் ஆசைப்பட்டுப் பலன் கிடைக்குமானால் அது துன்பத்தைத் தவிர வேறு எதுவுமாய்இருக்க முடியாது. உன் நினைவுகளில் தவறில்லை ராதா. ஆனால் நான் உனக்கு ஏற்றவனா? நான் ஏழை ராதா ஏழை. அன்றாட வாழ்வுக்கே பிரச்சினைப் படும் குடும்ப வர்க்கத்தினன். எமது இரு குடும்பங்களுக்குமிடையிலுள்ள அந்தஸ்து என்ற இரும்புத் திரையை விலக்க முடியுமா ராதா? அல்லது நாம் தான் சேர முடியுமா? நீ நினைப்பதில் தவறு இல்லையாயினும் நான் அப்படி ஒன்றை நினைப்பதே தவறு ராதா. அது மிகப் பெரிய தவறு.'

'வாசு' என்று அவன் மார்பில் சாய்ந்தாள் ராதாலட்சுமி. அவளால் எதுவும் பேச முடியவில்லை. இதுவரை நாள் அவள் திரையிட்டு வைத்திருந்த அகம்பாவக் கூடு நொருங்கி விட்டது. அவனுடைய திடசித்தம் அவளுடைய பலவீனக் கோட்டையை ஈடாடச் செய்து விட்டது. அவளது பலவீனத்தை அவன் தனக்குச் சாதாகமாக்கிக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக அவளைத் தன்னிடமிருந்து விலக்கிவிட்டுத் திரும்பினான்.




## ஊழலின் மறுபெயர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமா?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் ஊழலும் முறைகேடுகளும் நடைபெற்றுவருவதை சுதந்திரன் எப்பொழுதும் புட்டுக்காட்டி வந்திருக்கிறது. அதுவும், முற்போக்காளர்கள் என்று தமக்கு முத்திரை குத்திக்கொண்டிருக்கும் கைலாசபதி — சிவத்தம்பி கும்பல் அங்கு 'அட்வைஸரிக்கமிட்டியில்' நியமிக்கப்பட்டபின்னர் நடக்கும் அனர்த்தங்களோ ஏராளம்.

ஏற்கெனவே நீண்ட பல காலமாக ஒலிபரப்பு தமிழ்ச் சேவையில் அறிவிப்பாளர்களாக கடமையாற்றிவரும் அனுபவமுதிர்ச்சி பெற்றவர்களுக்கு திரும்பவும் 'audition' (குரல் பரீட்சை) பரீட்சை நடத்த வேண்டுமென்று கைலாசபதி—சிவத்தம்பிகும்பல் தீர்மானித்துள்ளதாம்.

அதே வேளையில் அட்வைசரி சபையிலுள்ள ஒருவரின் மாணவியும் முற்போக்கு குஞ்சு என்று கூறப்படும் ஒருவரின் மனைவியுமான ஒருவர் எந்தவகையான audition பரீட்சையுமின்றி சேர்க்கப் பட்டுள்ளராம்.

ஊழலே! உன் மறுபெயர் தான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமா என்று கேட்கிறார்கள் பொதுமக்கள்!

**வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்தல்**


தமிழ் நாட்டில் வெள்ளி விழா கொண்டாடி ஈழத்திலும்

வெற்றிமுரசு கொட்டுகிறது!



124-வது தினம்

கெப்பிட்டல் வெலிங்டன்

(கொழும்பு) (யாழ்ப்பாணம்)

சிவாஜிகணேசன், வாணிஸ்ரீ

—நடித்த—

வசந்த மாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெயிட்டி மற்றும் இரு திரைகளில்

காட்சியளிக்கிறது

**சுடரும் சூறாவளியும்**

ஜெமினி
முத்து
ராமன்
நிர்மலா

புது முகங்கள்
சந்திரமோகன் ஜெயா தேங்காய் சீனிவாசன்

மனோரமா

அன்பு வந்தது

அனுபவம் தானே வரவேண்டும்

முத்துமணிக் கண்ணனுக்கு

எம். ஆர். ஆர். வாசு

பாடல்கள் உங்கள் உள்ளத்தில்

சுடர்விட இன்றே பாருங்கள்

## 2வது மாதம்

# செல்லமகால்

சிவாஜி நாகேஷ்
முத்துராமன்


நடித்த

# 3 தெய்வங்கள்

( வண்ணக் கலர் )



## இப்பொழுது காட்சியளிக்கிறது



# சென்ட்ரல்

## ராணி (யாழ்நகர்)

தமிழ் நாட்டில் 100 நாட்களுக்கு
மேல் ஓடியது

முத்துராமன், ஜி. வரலெட்சுமி,

பிரமிளா, ரங்கராவ், ராகவன், ரி. ஆர். ராமச்சந்திரன், ஓ. ஏ. கே. தேவர்,

ஆர். வரலெட்சுமி —நடித்த— கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# வாழையடி வாழை


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ இலக்கத்தில் 1973ம் வருடம் ... அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org